සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

දෙවන වාර පරීක්ෂණය - 2025
இரண்டாம் தவணைப் பரீட்சை - 2025 / Second Term Test - 2025

ශ්‍රේණිය தரம் Grade	11	தமிழ் இலக்கிய நயம்	කාලය நேரம் Time	03 மணி.

නම பெயர் Name ..... විභාග අංකය சுட்டிலக்கம் Index No. .....

மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்

பகுதி I

- *முதலாம் வினா கட்டாயமானது.*
- *இரண்டாம் வினாவில் பாடற் பகுதி அல்லது உரைப்பகுதியில் ஏதேனும் ஒன்றுக்கு மாத்திரம் விடை எழுதுக.*

01 முதல் 05 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.

(1) 'நீர் மென்மையானது' என்று நினைக்கின்றோம்.
ஆனால் அது வெள்ளமானால் கரைகளை உடைத்து விடுகிறது. வலிமையான அணைகளைத் தகர்த்துவிடுகிறது. ஊர்களையே அழித்துவிடுகிறது.

(அ). இவ்வரிகள் எவ்விலக்கிய வகை சார்ந்தன?

.....

(ஆ). இங்கு மென்மையின் சக்தி எவ்வாறு காட்டப்படுகிறது?

.....

(2) 'தாமரை வதனம் சாய்த்து தனு நெடுந்தரையில் ஊன்றி
மாமியார் குழுவின் வந்தானாம் என...'

(அ). இங்கு தனு என்பதன் கருத்து யாது?

.....

(ஆ). மாமியார் குழுவின் வந்தவன் யார்?

.....

(3) 'சிரல்வாய் வனப்பினவாகி நிரலொப்ப
ஈர்த் தண் தளவம் தகைந்தன...'

(அ). தளவம் எனப்படுவது யாது?

.....

(ஆ). இங்கு கையாளப்பட்டுள்ள அணி யாது? விளக்குக.

.....

.....

(4) 'உதிர்ந்து வீழ்ந்த மலர்
கிளைக்குத் திரும்புகிறது
ஓ... வண்ணாத்துப்பூச்சி...'

(அ). இயற்கையின் குறியீடாக இங்கு குறிப்பிடப்படுவது யாது?

.....

(ஆ). இது எவ்வகை கவிதைகளுள் உள்ளடங்குகிறது?

.....

(5) ‘அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்

(அ). அன்னத்தின் தூவி எனப்படுவது யாது?

.....

(ஆ). தலைவியின் பாதத்தின் மென்மை எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?

.....

.....

(20 புள்ளிகள்)

01. பின்வரும் பாடற் பகுதியை அல்லது உரைப்பகுதியை வாசித்து வினாக்குளுக்கு விடை எழுதுக.

பாடல் பகுதி

ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்
எழுந்து யிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்’
நேசமாமரியா மக்த லேநா
நேரிலே இந்தச் செய்தியைக் கண்டாள்
தேசத்தீர் இதன் உட்பொருள் கேளீர்;
தேவர் வந்து நமக்குட் புகுந்தே
நாச மின்றி நமை நித்தங் காப்பார்;
நம் அகந்தையை நாம் கொன்று விட்டால்

அன்புகாண் மரியா மக்த லேநா
ஆவி காணுதிர் யேசு கிறிஸ்து;
முன்பு தீமை வடிவினைக் கொன்றால்
மூன்று நாளினில் நல்லுயிர் தோன்றும்;
பொன்பொ லிந்த முகத்தினிற் கண்டே
போற்றுவாள் அந்த நல்லுயிர் தன்னை;
அன்பெனும் மரியா மக்த லேநா
ஆஹா ! சாலப் பெருங்கிளி யி.ர்.தே

உண்மை யென்ற சிலுவையிற் கட்டி
உணர்வை ஆணித் தவங்கொண்டடித்தால்
வண்மைப் பேருயிர் யேசு கிறிஸ்து
வான மேனியில் அங்கு விளங்கும்
பெண்மைகாண் மரியா மக்த லேநா
பேணும் நல்லறம் யேசு கிறிஸ்து
நுண்மை கொண்ட பொருளிது கண்டீர்
நொடியி லி.ர்.து பயின்றிட லாகும்.

(1) இயேசு கிறிஸ்துவின் 3ம் நாள் உயிர்ப்பு பற்றி பாரதி எவ்வாறு நோக்குகின்றார்?

.....

(2) மரியா மக்த லேநா பற்றி எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளது?

.....

(3) கவிதையில் வெளிப்படும் உருவக அணிகள் இரண்டை எடுத்துக்காட்டி விளக்குக?

.....

(4) பின்வருவனவற்றுக்கு விடை எழுதுக.

- இயேசு கிறிஸ்து கூறிய ஆருடம் யாது?

.....

- தேசமக்களுக்கு விடுக்கப்பட்ட செய்தி யாது?

.....

(20 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

அல்லது

உரைப் பகுதி

உரிமைக்கும் கடமைக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வை நீக்குவதற்காக இயற்கை அமைத்த ஓர் அருமையான பாதுகாப்பே அன்பு எனப்படுவது. அன்பு எங்கே உயர்ந்து விளங்குகின்றதோ, அங்கே உரிமைப் போராட்டம் இல்லை; கடமைக் குறைவு இல்லை. அதனால் "அன்பின் வழியது உயிர்நிலை" என்கிறார் திருவள்ளுவர். அன்பு இல்லாத வாழ்க்கை பாலை நிலத்தில் உள்ள பட்டமரம் போன்றது என்றும் கூறுகின்றார். அதனால் குடும்பத்தில் அன்பு ஆட்சி செய்யவேண்டும் என்று முன்னோர்கள் ஏற்படுத்தினார்கள். இவ்வாழ்க்கையை ஓர் அறம் என்று சிறப்பித்து, இல்லறம் என்றார்கள். மக்கட் பேறு, சுற்றம் தழுவுதல் முதலியவற்றை அதன் அங்கம் ஆக்கினார்கள். தேசபக்தி என்று அமைந்த அன்பு அப்படியே நாடு என்ற பெரிய குடும்பத்தைப் போற்றி வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும். சமயம் அல்லது கடவுள் நெறி என்பதும், உலகத்தில் வாழும் எல்லோரிடமும் அன்பு செலுத்தி, உலகத்தையே கடவுளின் குடும்பம் என்று கருதும் பரந்த நோக்கத்தை வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும்.

ஆனால், குடும்பத்தில் தாய் செலுத்தும் அன்பைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு தந்தையோ மக்களோ தன்னலம் உடையவர்களாய்த் தீமை செய்வார்களானால் என்ன ஆகும்? அப்படித்தான், நாட்டில் ஒரு சாராரின் அன்பைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு மற்றொரு சாரார் தன்னலமாக வாழ்வார்களானால், அன்பு வரண்டு போகும். உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம் ஏற்படும்.

(1) இல்லறத்தின் அங்கங்களாக எவை கூறப்படுகின்றன?

.....

(2) அன்பு இல்லாத வாழ்க்கை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்கள் யாவை?

.....

(3) அன்பின் சிறப்பு பற்றி எவ்வாறு இப்பந்தியில் கூறப்பட்டுள்ளது?

.....

(4) உரிமைக்கும் கடமைக்கும் இடையில் போராட்டம் ஏற்படக் காரணம் யாது?

.....

.....

(20 புள்ளிகள்)

பகுதி II

- *முதலாம் வினா கட்டாயமானது.*
- *ஏனைய 2, 3, 4, 5 ஆகிய வினாக்களிலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களை மாத்திரம் தெரிவு செய்து எழுதுக.*

1. பின்வரும் செய்யுள் பகுதியை வாசித்து, செய்யுளின் கீழ் தரப்பட்டுள்ள குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு 200 சொற்களுக்குக் குறையாமல் நயந்து எழுதுக.

காலந்தோறும் அகம்

சுனைப்பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனங்கிளி கடியும் பூங்கட் பேதை
தானறிந் தனளோ இலளோ பானாள்
பள்ளி யானையின் உயிர்த்தென்
உள்ளம் பின்னுந் தன்னுழை யதுவே.

சிரல்வாய் வனப்பின வாகி நிரலொப்ப
ஈர்த்தண் டளவந் தகைந்தன – சீர்த்தக்க
செல்வ மழைமதர்க்கட் சின்மொழிப் பேதையூர்
நல்விருந் தாக நமக்கு.

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாம நிரைதாழ்ந்த பந்தற் கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேண் தோழிநான்

உள்ளம்போய் நாண்போய் உரைபோய் வரிநெடுங்கண்
வெள்ளம்போய் வேகின்ற மென்றளிர்போல் - பிள்ளைமீன்
புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை பூவாளி
உள்ளரிக்கச் சோர்ந்தாள் உயிர்.

(1) பாடலுக்கான அறிமுகமும் தலைப்பின் பொருத்தப்பாடும்.

(2) குறிஞ்சி, முல்லைத் திணைப் பாடல்களில் வெளிப்படும் தலைவனின் அகத்தினை மரபு.

(3) ஆண்டாளின் பாடலில் வெளிப்படும் கடவுள் மீதான பக்தியுணர்வு.

(4) சோழர்காலப் பாடலில் வெளிப்படும் நாட்டுவளச் சிறப்பு.

(5) பாடல்களில் கையாளப்பட்டுள்ள அணிச்சிறப்பு

(6 x 5 = 30 புள்ளிகள்)

2. புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம் என்ற கவிதைப் பகுதியில்

(அ) தோட்டத் தொழிலாளிப் பெண்கள் மீதான அடக்குமுறை.
(ஆ) பாடலில் பயிலப்பட்டுள்ள அணிப்பயன்பாடு என்பவற்றை தெளிவுபடுத்துக.

(15 புள்ளிகள்)

3. 'மின்மினிகளால் ஒரு தோரணம்' எனும் கட்டுரையில்,

(அ) ஹைக்கூ கவிதை பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள்.
(ஆ) "சிறிய வார்த்தைகளுக்குள் மிகப்பெரிய அர்த்தங்களை தரவல்லது ஹைக்கூ" இக்கூற்றினை உதாரணத்துடன் விளக்குக.

(15 ள்ளிகள்)

4. 'தெளிவு' என்ற சிறுகதையில்,

(அ) மைமூன் கிழவியின் வறுமை நிலை.
(ஆ) பாரூக் நானாவின் கடமையுணர்வு என்பன வெளிப்படும் விதத்தை எடுத்துக்காட்டி விளக்குக.

(15 ள்ளிகள்)


5. தூர் என்ற கவிதையை மையமாகக் கொண்டு,

(அ) வேலைக்காரி பற்றிய தப்பெண்ணங்கள் களையப்படும் விதம்,
(ஆ) அப்பாக்கள் பற்றியதான சித்திரிப்புக்கள் காட்டப்படும் விதத்தை எடுத்துரைக்க.

(15 புள்ளிகள்)

සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

11 ශ්‍රේණිය කෙටි සටහන් පොත් සංශෝධිත නව විෂය නිර්දේශයේ පාඩමෙන් පාඩමට




Rs : 300




Rs : 300



Rs : 300




Rs : 300




Rs : 300



Rs : 300



Rs : 350



Rs : 300



Rs : 300



Rs : 200




Rs : 200



Rs : 200



Rs : 250




Rs : 250




Rs : 200




Rs : 200



Rs : 200



Rs : 300




Rs : 300




Rs : 200



Rs : 200



Rs : 250




Rs : 650


මෙම කෙටි සටහන් පොත් සකස් කොට ඇත්තේ ජාතික අධ්‍යාපන ආයතනය මගින් සම්පාදනය කොට ඇති නව විෂය නිර්දේශය අනුව, විෂය ප්‍රවීණත්වයෙන් යුත් සම්පාදක මණ්ඩලයක් විසිනි, එහෙයින් මෙහි අන්තර්ගත සියලු සටහන් එම විෂය නිර්දේශයේ සෑම මාතෘකාවක්ම ආවරණයකොට තිබේ. මෙම ග්‍රන්ථ සම්පාදනය කිරීමේ දී පූර්ණ අවධානය යොමුකොට ඇත්තේ සිසුන්ට මෙන්ම ගුරුවරුන්ට ද අවශ්‍යයෙන්ම මතකයේ තබා ගත යුතු සියලු කරුණු අන්තර්ගත කරමින් වන හෙයින් වෙනත් අතිරේක ග්‍රන්ථ පරිහරණයකින් තොරව වුවද අදාල විෂය නිර්දේශයේ වැදගත් කරුණු සියල්ල ඉතා පහසුවෙන් හැදෑරීමේ මෙන්ම මතකයේ රඳවා ගැනීමේ හැකියාව ද ලැබෙනු ඇත.

LOL.LK
LOL STORE (PVT) LTD
CASH ON DELIVERY
VISA
mastercard
KOKO
037 20 60 110
071 77 74 440
Buy Now
CLICK HERE


11 ශ්‍රේණි ඉංග්‍රීසි මාධ්‍ය කෙටි සටහන් පොත් ENGLISH MEDIAM SHORT NOTE BOOKS Rs 180/-




Rs : 180




Rs : 180




Rs : 180




Rs : 180




Rs : 180




Rs : 180




Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180

මෙම කෙටි සටහන් පොත් සකස් කොට ඇත්තේ ජාතික අධ්‍යාපන ආයතනය මගින් සම්පාදනය කොට ඇති නව විෂය නිර්දේශය අනුව, විෂය ප්‍රවීණත්වයෙන් යුත් සම්පාදක මණ්ඩලයක් විසිනි, එහෙයින් මෙහි අන්තර්ගත සියලු සටහන් එම විෂය නිර්දේශයේ සෑම මාතෘකාවක්ම ආවරණයකොට තිබේ. මෙම ග්‍රන්ථ සම්පාදනය කිරීමේ දී පූර්ණ අවධානය යොමුකොට ඇත්තේ සිසුන්ට මෙන්ම ගුරුවරුන්ට ද අවශ්‍යයෙන්ම මතකයේ තබා ගත යුතු සියලු කරුණු අන්තර්ගත කරමින් වන හෙයින් වෙනත් අතිරේක ග්‍රන්ථ පරිහරණයකින් තොරව වුවද අදාල විෂය නිර්දේශයේ වැදගත් කරුණු සියල්ල ඉතා පහසුවෙන් හැදෑරීමේ මෙන්ම මතකයේ රඳවා ගැනීමේ හැකියාව ද ලැබෙනු ඇත.

LOL.LK
LOL STORE (PVT) LTD

CASH ON DELIVERY | VISA | mastercard | KOKO

037 20 60 110
071 77 74 440

Buy Now
CLICK HERE